[1993 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 210—டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

210—

ஆனைமலை ஒன்றியத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.

*10400—டாக்டர் அ. ஸ்ரீதரன் ;

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலை ஒன்றியம், கோட்டூர் பேரூராட்சி மற்றும் வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சிகளில் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் ஆனைமலை ஒன்றியம், கோட்டூர் பேரூராட்சியிலும் வேட்டைக்காரன், புதூர் பேரூராட்சியிலும் கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டி குடிநீர் விநியோகம் செய்வதற்கான திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நடப்பில் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஒன்றியம், கோட்டூர் பேரூராட்சியிலும், வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சியிலும் சுமார் 48,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இது குறித்து நான் மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில் பேசினேன். அங்குள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரையும் அங்கே அழைத்துச் சென்று காண்பித்து, அவரும் அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டும் என்பதை ஒத்துக்கொண்டு என்னிடம் எழுதியும் கொடுத்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரும் இது முக்கியமான இடம் என்று கருதி, சிபாரிசு செய்திருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தமிழகத்திலே எல்லா இடங்களிலும் தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக சீரிய முயற்சி எடுத்துக் கொண்டு நல்ல பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிற இந்த நேரத்தில் அவர்களுடைய நல்லெண்ணத்தை உந்து கோலாக வைத்து இந்தக் காரியத்தை உடனடியாக முடித்துத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 1]

முற்பகல் 10-40

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்ட்-2 ஸ்கீமிலாவது சேர்த்து இதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டூர், வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சிகளின் தற்போதைய மக்கள் தொகை முறையே 22,145, 18,504 ஆகும். கோட்டூர் பேரூராட்சியில் சுமார் 20 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வகையில் கோட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு நபருக்கு 45 லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெருகி வரும் மக்கள் தொகையை கணக்கிலே கொண்டு கோட்டூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1983-இல் 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டது. தற்போது நாள் ஒன்றுக்கு 1.68 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வேட்டைக்காரன் புதூருக்கு 1996-இல் எட்டப்படும் மக்கள் தொகையை கணக்கிலே கொண்டு 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 45 லிட்டர் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதை தற்போது கூடுதலாக்க கருத்துருக்கள் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கருத்திலே கொண்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 211, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வினா எண். 212, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

212—

விண்ணமங்கலம், பூதராயநல்லூர் ஊராட்சிகளை பூதலூர் ஒன்றியத்தோடு இணைக்கும் நடவடிக்கை.

*11349— திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விண்ணமங்கலம், பூதராயநல்லூர் ஆகிய ஊராட்சிகளை பூதலூர் ஒன்றியத்தோடு இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?